பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 28 செவ்வாய்க்கிழமை 12.01.2021 கதிர் 68

### இது ரகசியம் அல்ல!

கொரோனா இரண்டாவது தொற்றுப் பரவல் ஏற்பட்டமையை அடுத்து பல தொத்தணிகள் நமக்கு அறிமுகமாகி விட்டன.

ஆரம்பத்தில் வெலிசறை (கடற்படை முகாம்) கொத்தணி, கந்தக்காடு (புனர்வாழ்வு முகாம்) கொத்தணி, பக்கம்02 »

# முடங்குமா வவுனியா? இன்று அவசர கூட்டம்

## நேற்று மாத்திரம் 51 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் 51 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டமையால் மாவட்டத்தை முடக்க வேண்டுமா என்பது தொடர்பில் இன்று காலை அவசர கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வர்த்தகர்கள் மத்தியில் பரவும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் 112 ஆக அதிகரித்துள்ளது. இந்தநிலையிலேயே மேற்படி அவசர கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. பக்கம் 02 »

## சுமந்திரனுக்கு கொரோனா இல்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்குக் கொரோனாவைரஸ் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி பக்கம் 02 »

## வடக்கில் நேற்று 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று



வடக்கு மாகாணத்தில் நேற்று 55 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பக்கம் 02 »

## எம்.பிக்கள் 31 பேர் தனிமைப்படுத்தலில்!

கொரோனாத்தொற்று அச்சுறுத்தல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள நாடாளமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை 31 ஆக உயர்வடைந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார ஆகிய மூன்று பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள பக்கம் 02 »

## கொரோனாக் கட்டுப்பாட்டிலும் தோல்வியடைந்துள்ளது அரசு!




### எம்.பிக்களைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூடப் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த அரசானது பொருளாதாரம், நிர்வாகம் என்பவற்றில் மாத்திரமின்றி கொரோனாக் கட்டுப்பாட்டிலும் தோல்வியடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ பக்கம் 02 »

## இராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேரையும் 15 நாள்கள் தனிமைப்படுத்த உத்தரவு!





இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு இராமேஸ்வரம் மீனவர்கள் 09 பேரையும் 15 நாள்கள் தனிமைப்படுத்துமாறு ஊர்காவற்றுறை பக்கம் 02 »

## அனுமதி பெறப்படாத தூபியை இடித்தழித்தமை தவறு இல்லை



### விவாதிப்பதற்கு எதுவும் இல்லை என்கிறார் கல்வி அமைச்சர் பீரிஸ்

யாழ்.பல்கலைக்கழகத்தில் போர் நினைவுத் தூபி அமைப்பதற்கு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. குறித்த பக்கம் 02 »

### வெற்றியுடன் முடிவுக்கு வந்தது மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம்

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு மீண்டும் அடிக்கல்; சட்டபூர்வமாகக் கட்டப்படும் எனத் துணைவேந்தர் உறுதி!

பக்கம் 10 »

## தூபி இடித்தழிப்புக்கு எதிராக முடங்கியது வடக்கு - கிழக்கு!

### வெறிச்சோடிக் காணப்பட்டன பிரதான நகரங்கள்

பக்கம் 10 »

## மேலும் 8 பேர் மரணம் கொரோனா காவு 240

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

6 ஆண்களும், 2 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் பக்கம் 02 »

## கொரோனாவுக்கு நேற்று மாத்திரம் 568 பேர் இலக்கு

இலங்கையில் நேற்றும் 568 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் பக்கம் 02 »

## வடக்கில் விடாது மழை 88 குடும்பங்கள் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.12

வடக்கு மாகாணத்தில் தொடரும் அட மழை காரணமாக இதுவரை 88 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகள் அறிவித்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் ஏற்பட்ட அதிக மழை வீழ்ச்சியின் காரணமாக நேற்று மாலை வரைக்கும் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் 88 பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மினுவாங்கொடை (ஆடைத் தொழிற்சாலை)கொத்தணி, பேலியகொடை (மீன் சந்தை) கொத்தணி என்று கொத்தணிகள் நீண்டு வருகின்றமை தெரிந்ததே.

மருதனார்மடம் (சந்தை) கொத்தணி என்ற வரிசையில் வவுனியா கொத்தணி குறித்தும் இப்போது பேசப்படுகின்றது.

அந்தப் பட்டியலில் நாடாளுமன்றக் கொத்தணி என்ற புதிய அணி உருவாகும் போல தெரிகின்றது.

ஏற்கனவே தயாசிறி ஜயசேகரா, ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார என்ற பட்டியல் தயாராகி விட்டது. இதில் வாசுதேவ நாணயக்கார வயதில் மூத்தவர். 1939 ஜனவரி 3ஆம் திகதி பிறந்தவர். ஒரு வாரத்துக்கு முன்னர்தாம் தமது 82 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியவர். அவரை இந்த நோயிலிருந்து மீட்பதில் அரசு விசேட கவனம் செலுத்தும் என நம்பலாம்.

நாடாளுமன்ற 'லொபி'யில் ஹக்கீமுடன் பழகியவர் என்ற முறையில் சுமந்திரன் எம்.பியும் பி.சி.ஆர். சோதனை மேற்கொண்டிருந்தார். தொற்று ஏற்படவில்லை என்று பூர்வாங்க சோதனையில் தெளிவாகியுள்ளது. எனினும் இன்னும் சில நாள்கள் அவர் காத்திருக்க வேண்டும். ஹக்கீமுடன் அவர் பழகி இன்றுடன் ஒருவாரம். இன்னும் மூன்று, நான்கு நாள்களில் அடுத்த தடவை ஒரு பரிசோதனை செய்ய வேண்டும். அதிலும் தொற்று இல்லை என்றால்தான், ஹக்கீமுடன் அன்று பழகிய போது அவருக்குத் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதியாகும்.

நாடாளுமன்றில் சுமந்திரனுடன் பழகிய ஹக்கீமுக்குத் தொற்று இருக்கின்றமை பற்றிய தகவலை வைத்துக் கொண்டு சுமந்திரன வெளியே விடாமல் வீட்டுக்குள் முடக்குவதற்கான கடும் முயற்சியில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பிரசாத் பெர்னாண்டோ மும்முரமாக இருக்கின்றார் என இப்பத்தியில் நேற்று குறிப்பிட்டிருந்தேன். தமது கைவரிசையை நேற்றுப் பகல் அவர் காட்டிவிட்டார். சுமந்திரனின் வீட்டைத் தனிமைப்படுத்துவதான உத்தரவை பொலிஸ் தனக்குரிய அதிகாரத்தைப் பிரயோகித்து சுமந்திரனின் யாழ்.இல்லத்தின் சுவரில் ஒட்டியுள்ளது. இரண்டாவது பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதியாகும் வரை – இன்னும் ஒருவார காலமாவது – சுமந்திரனை வீட்டுக்குள் முடக்கும் சூழலை ஏற்படுத்தி விட்டார் பிரசாத் பெர்னான்டோ. எது, எப்படியோ ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன நீதிமன்றக் காவலில் – விளக்கமறியலில் – வைக்க முடியாத இன்ஸ்பெக்டர் ஏதோ வழிபண்ணி வீட்டுக் காவலில் வைத்து விட்டார்.

யாழ்.நீதிமன்றத்தில் பிரசாத் பெர்னான்டோவை சுமந்திரன் ஒரு பிடிபிடித்து மோசமாக விமர்சித்த போது 'ஆனைக்கு ஒரு காலம் வந்தா, பூனைக்கொரு காலம் வரும்' என்று பச்சாதாபத்துடன் பார்த்திருந்திருப்பார் போலும் அவர். இப்போது பூனைக்குரிய காலம். அவ்வளவுதான்.

நாடாளுமன்றத்தின் அனைத்து எம்.பிக்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரையும் இன்று நாடாளுமன்றுக்கு வந்து பி.சி.ஆர். சோதனை செய்து கொள்ளும்படி சபாநாயகர் கோரியுள்ளார். இது நாடாளுமன்ற அமர்வு காலமல்ல. அதனால் எம்.பிக்கள் பலரும் கொழும்பில் இல்லை. அதனால் இன்றைய சோதனையில் எம்.பிக்கள் பெரும்பாலும் இருக்க மாட்டார்கள்.

எது, எப்படியோ, நாடாளுமன்றக் கொத்தணி ஒன்று ஏற்படாமல் இருந்தால் சரி.

ஆனால், போகின்ற போக்கைப் பார்த்தால் அதுவும் சாத்தியமாக வாய்ப்புண்டு.

அதைத் தவிர்ப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் நாடப்படலாம். கொவிட் தொற்றைத் தவிர்ப்பதற்காக 'வீட்டிலிருந்தபடி வேலை' என்ற திட்டம் போல 'வீட்டிருந்தபடி நாடாளுமன்றம்' என்ற திட்டமும் நடைமுறைக்கு வரலாம். காணொலி மூலம் அமைச்சரவை கூடுகின்றமை போல நாடாளுமன்றமும் கூடலாம். எம்.பிக்கள் தத்தமது தொகுதிகளில் – வீடுகளில் – இருந்தபடி நாடாளுமன்றத்தில் பேசுவது போல கூச்சல் போடலாம், யாரையும் திட்டலாம். ஆனால் ஒரேயொரு விடயம். தண்ணீர் போத்தலை மாறி மாறி வீசுவது, அறிக்கைப் புத்தகங்களைத் தூக்கி எறிவது, மிளகாய்த் தண்ணீரை வாரியடிப்பது போன்ற களேபரங்களை அவர்கள் செய்ய முடியாது. அவ்வளவுதான்..!

– மின்னல் –

## முடங்குமா வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வவுனியா மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், சுகாதாரத் துறையினர், பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் எனச் சகல தரப்பினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையில் 27 பேருக்கும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையில் 24 பேருக்கும் என வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 51பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து வவுனியா மாவட்டத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்கவும், சுயதனிமைப்படுத்தலை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மாவட்டத்தை முடக்குவது தொடர்பில் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

## அனுமதி பெறப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்டுமானம் சட்ட விரோதமானது. அதனாலேயே அந்தத் தூபி இடித்தழிக்கப்பட்டது.

– இவ்வாறு கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அகற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மீண்டும் நினைவுத் தூபிக்கு அடிக்கல் நாட்டுவதற்கு முன்னரே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக சட்டத்துக்கு மாறாக, அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டுமானமொன்று அகற்றப்பட்டமை தொடர்பில் விவாதிப்பதற்கு எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த நினைவுத் தூபி அகற்றப்பட்டதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லை என்றும், மாணவர்களின் ஒற்றுமையே கருத்தில்கொள்ளப்பட்டது என்றும் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரது எதிர்ப்புக் காரணமாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி மீண்டும் நிர்மாணிக்க வாக்குறுதியளித்து, பல்கலைக்கழகத் துணைவேந்தர் நேற்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

## வடக்கில் நேற்று 55...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 427 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 27 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கும், யாழ். மாவட்டம் – உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கும் என 31 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 313 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. இதில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 24 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை புறப்பட்டு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 09 பேரும் காரைநகர் கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த ஒன்பது இராமேஸ்வரம் மீனவர்கள் காணொலி காட்சியூடாக ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி ஜுட்சன் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை 15 நாள்களுக்கு காரைநகர் கடற்படை முகாமில் இராமேஸ்வரம் மீனவர்களுக்கு சொந்தமான படகிலேயே தனிமைப்படுத்தித் தங்க வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 8 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எனவும், இவர்களில் ஒருவர் சிறைக் கைதியாவார் எனவும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 227 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதையடுத்துத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இந்தநிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் ஹக்கீமுக்கு அருகிலிருந்து கஞ்சி பருகியமையால் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் சுமந்திரனுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது.

அதன் முடிவு நேற்றிரவு வெளியாகிய போதே அவருக்குத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் உறுதிப்படுத்தினர்.

## வடக்கில் விடாது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குடும்பங்களைச் சேர்ந்த 319 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்திலே 22 குடும்பங்களைச் சேர்ந்த 81 பேர் பாதிப்படைந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிப்புக்களிற்கு உள்ளாகியுள்ளனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நெடுங்கேணி வெடிவைத்தகுளம் கிராமத்தில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 167பேர் என இதுவரை மொத்தமாக 88 குடும்பங்களைச் சேர்ந்த 319பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கொரோனாவுக்கு நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொற்றாளர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 948 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் 45 ஆயிரத்து 186 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 42 ஆயிரத்து 91 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 625 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொரோனாக் கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

அரசின் பலவீனத்தையும் ஜனாதிபதியின் குறைபாடுகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். இவ்வாறு சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு அந்த குறைபாடுகளை நீக்கக்கொள்ள வேண்டுமே தவிர கருத்தைத் தெரிவித்தவருக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இவ்வாறான செயற்பாடுகள் சிவில் நிர்வாகத்திலிருந்து விலகி நாடு இராணுவ நிர்வாகத்தை நோக்கிச் செல்கின்றது என்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்க்கின்றது. நாட்டின் தலைவரொருவர் இவ்வாறு கருத்துக்களைத் தெரிவிப்பது பொறுத்தமற்றது. இவ்வாறான குணாதிசயம் தலைமைத்துவப் பண்புக்கும் பொறுத்தமானதல்ல.

கொரோனாத் தொற்றிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசானது பொருளாதாரம், நிர்வாகம் என்பவற்றில் மாத்திரமின்றி கொரோனாக் கட்டுப்பாட்டிலும் தோல்வியடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுவது சாதாரண விடயமாகும் என்றும், அதனால் நாடாளுமன்றத்தை முழுமையாக மூட வேண்டிய தேவை கிடையாது என்றும் சபாநாயகர் கூறியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தை முழுமையாக மூடாமல் அதன் செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடும்கூட. ஆனால், அங்கும் பலருக்குத் தொற்று ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக் கொள்வது ? சபாநாயகர் உள்ளிட்ட அதிகாரிகளே அதனைப் பொறுப்பேற்க வேண்டும். முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நாடாளுமன்றத்தினுள் பாரதூரமான நிலைமையே ஏற்படும்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்துக்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமக்கும் உடன்பாடிருக்கின்றது. ஆனால், அதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

காரணம் தற்போது கொரோனாப் பரவல் சமூகப் பரவலாக மாற்றமடைந்து நாடளாவிய ரீதியில் பரவியுள்ளது. அதனால் மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் காணப்படும் அச்சம் நீக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கும் மேலதிகமாக கட்டம் கட்டமாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

முழு உலகமும் அவதானம் செலுத்தியுள்ள கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு நிதி இல்லை என்று கூற முடியாது. காரணம் கொரோனாத் தொற்றுக்காக பல்வேறு வகையில் நிதி உதவிகள் அரசுக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறான நிலைமைக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் சின்னத்தை மாற்றுவதற்கு பல பில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கின்றது. அது தற்போது அநாவசியமான செலவாகும் – என்றார்.

## எம்.பிக்கள் 31 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலையில் அவர்களுடன் தொடர்பில் இருந்த அடிப்படையில் இவ்வாறு 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிமைப்படுத்தலுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர் என நாடாளுமன்ற தகவல் தொலைத்தொடர்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அரசியல் ரீதியான தலையீடுகள் எவையும் நிபுணர்குழுவின் அறிக்கையில் கிடையாது!

## இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா அடித்துக் கூறுகிறார்



கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைகள் தொடர்பில் விசேட சுகாதார நிபுணர் குழுவின் அறிக்கையின் தீர்மானத்தில் அரசியல் தலையீடுகள் ஏதும் கிடையா.

நாட்டு மக்களை கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என கிராமிய வீதிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

காலி மாவட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் இறுதி கிரியைகள் குறித்து விசேட நிபுணர் குழு வழங்கியுள்ள தீர்வுக்கு நாம் இணங்குகின்றோம்.

அந்தத் தீர்மானத்தில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது. கொவிட் 19 வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

எதிர்வரும் 22 ஆம் திகதி வர்த்தக விமானங்களுக்காக விமான நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. இந்த வர்த்தக விமானங்களில் இலங்கைக்கு வருகை தருபவர்களுக்காக சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய அவர்கள் ஹோட்டல்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதே போல் வெளிநாடுகளில் உள்ள 68 ஆயிரம் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இந்த மாதம் 22 ஆம் திகதியின் பின்னர் அவர்களுக்கு விருப்பமான விமானங்களில் இலங்கை வரக் கூடிய ஏற்படுகளை மேற்கொள்வது எமது நோக்கம்.

அதே போல் சுற்றுலா வர்த்தகத்துடன் தொடர்புடைய மக்களுக்காக சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உக்ரேன் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த வேலைத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டு எதிர்காலத்தில் இவ்வாறான வேலைத்திட்டமொன்றை எவ்வாறு முன்னெடுப்பது என்ற அனுபவத்தைப் பெறுவதே இதன் நோக்கமாகும்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாட்டுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். தற்போது வைரஸ் பரவல் ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகிறது.

இருப்பினும் சுகாதார பாதுகாப்பு அறிவிவுத்தல்கள் தொடர்ந்து கடுமையான முறையில் செயற்படுத்தப்படும். – என்றார்.

# பெருந்தோட்டக் கம்பனிகளை அரசு பொறுப்பேற்க வேண்டும்!

## சட்டத்தரணி மோகனராஜன் வலியுறுத்தல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பெருந்தோட்டக் கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எஸ். மோகனராஜன் வலியுறுத்தினார்.



நுவரெலியா – இராகலை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிஸ கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மகேந்திரன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் மலையகப் பிராந்திய இணைப்பாளர் எஸ். மோகன்ராஜ், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிஸ கட்சியின் மலையக பிராந்திய செயற்பாட்டாளர் பீ.பத்மசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்பதில் எமது தொழிற்சங்கமும் உறுதியாக நிற்கின்றது. அதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்படும்.

ஆயிரம் ரூபா தொடர்பான முன்மொழிவு அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. முடியாத முன்மொழிவாக இருந்தால் அது பாதீட்டில் முன்வைக்கப்பட்டிருக்காது. உரிய தேடலின் பின்னரே அந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அதனை எதிர்க்கக்கூடிய நிலையில் கம்பனிகள் காணப்படுகின்றமை சிக்கலுக்குரிய விடயமாகும். அரச கொள்கைக்கு எதிராகச் செயற்படும் தொழில் துறைக்கு எவ்வாறு அரச காணிகளைக் குத்தகைக்கு வழங்கமுடியும்?

ஆயிரம் ரூபாவை கம்பனிகளுக்கு வழங்க முடியும். உரிய இலாபத்தை அவை ஈட்டுகின்றன. எனினும், சம்பள உயர்வை வழங்காமல் இருப்பதற்கும், வரிகளிலிருந்து தப்புவதற்கும் உப கம்பனிகளை நடத்தி பிரதான கம்பனிகள், உரிய தரவுகளைக் காட்டுவதில்லை. ஏனைய துறைகளில்போன்று பெருந்தோட்டத் துறையிலும் மாபியா செயற்படுகின்றது.

ஆகவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசு கூறியமைபோல, கம்பனிகளை அரசு பொறுப்பேற்கவேண்டும். – என்றார்.

# கிளிநொச்சியில் தொடர்கிறது மழை வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு

கிளிநொச்சியில் பெய்து வரும் தொடர் மழையால் குளங்கள் வான் பாய்கிறதுடன், வெள்ள எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இரணைமடு குளத்தின் 4 வான்கதவு கள் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளன.

நேற்று (திங்கட்கிழமை) காலை 6 மணி வாசிப்பின் பிரகாரம் கிளிநொச்சி நீர்பாசன குளங்கள் மீண்டும் வான் பாய ஆரம்பித்துள்ளன எனவும் வெள்ள முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரணைமடு குளம் 32 வான் பாய்வதுடன் 4 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. 2 கதவுகள் ஓர் அடியாகவும் ஏனைய இரு கதவுகள் 6 அங்குலமாகவும் திறந்து விடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதிக நீர் வருகை காரணமாக ஞாயிறு இரவு 6 வான் கதவுகள் திறந்து விடப்பட்டன எனவும் அதில் இரண்டு பூட்டப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடும் நீர்பாசனத் திணைக்களம், நீர் வரத்து அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மேலும் கதவுகள் திறக்கப்படலாம் எனவும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பரந்தன், உமையாள்புரம் உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவநிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை கல்மடு குளம் 2 அங்குலமும் பிரமந்தனாறு குளம் 2 அங்குலமும் கனகாம்பிகை 3 அங்குலமும் அக்கராயன்குளம் ஓர் அங்குலமும் கரியாலை நாகபடுவான் குளம் 3 அங்குலமும் புதுமுறிப்பு குளம் ஓர் அங்குலமும் குடமுருட்டி குளம் 3 அங்குலமும் வன்னேரிக்குளம் ஓர் அங்குலமும் வான்பாய்ந்து வருவதாக நீர்பாசனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதுடன், இந்தக் குளங்களின் கீழ் உள்ள பகுதிகளுக்கு வெள்ள முன்னெச்சரிக்கையும் விடுத்துள்ளது.

வெள்ள அனர்த்த பகுதிகளாகக் காணப்படும் பொன்னகர், கனகாம்பிகை குளம், ஆனந்தபுரம் கிழக்கு, இரத்தினபுரம், பிரமந்தனாறு, தர்மபுரம், உழவனூர், பெரியகுளம், கல்லாறு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான வசந்தநகர், முறிகண்டி, செல்வபுரம் பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர், படையினர் மற்றும் பொலிஸாரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவநிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# வடக்கு, கிழக்கில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்!

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இலங்கைக்கு அண்மையாக வளிமண்டலத்தில் ஏற்பட்ட கீழ் மட்டத் தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின்பெரும்பாலான பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகள் ஆரம்பிக்கும் முடிவு மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

## திஸ்ஸ அத்தநாயக்க ஆலோசனை

கொரோனாத் தொற்றின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலைகளை ஆரம்பிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.



நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, அனைத்துப் பாடசாலைகளையும் ஒரே நேரத்தில் மீண்டும் ஆரம்பிப்பது கடும் ஆபத்துக்கு வழிவகுக்கும் எனக் கூறினார்.

மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் தவறிவிட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை அனைத்துப் பாடசாலைகளுக்கும் சுகாதார வசதிகள் வழங்கப்படவில்லை என்றும், அவற்றைப் பெறுவதற்கான நிதி பாடசாலைகளிடம் இல்லை என்றும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம், நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக சித்திரிக்க அரசு முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டிய அவர், இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படுகின்றவர்கள் மாணவர்களே என்றும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யுத்தத்தின் சத்தம் கேட்டால்தான் பாதிப்புறோரின் குரலும் கேட்கும்?

தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தின் – குறிப்பாக கோட்டாபய அரசின் – உண்மை முகம் யாது என்பதை அந்த அரசின் மூத்த, முக்கிய அமைச்சர் காமினி லொக்குகே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

*"மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மாகாண சபை முறைமையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் வெகுவிரைவில் நடத்தப்படும்"* – என்று கூறும் அவர், அதற்கு அப்பால் அரசின் உள்ளக் கிடக்கை யாது என்பதையும் தெளிவுபடுத்துகின்றார்.

*"ஆனாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல, வேறு எந்தவொரு மாகாணத்துக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ஒரு போதும் பிரித்து வழங்கப்பட மாட்டா" என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார் அவர்.*

*"அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்துமாறு ஆரம்ப காலத்தில் இருந்து பல தரப்பினராலும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாட்டில் மாறுபட்ட பல பிரச்சினைகள் தோற்றம் பெறும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒரு மாகாணத்துக்கு மாத்திரம் பிரித்து வழங்கினால் அங்கு சுயாட்சித் தன்மையே நிலவும்"* – என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

தெற்கு மக்களினதும் அதிகார வர்க்கத்தினரதும் நிலைப்பாடு யாது என்பதை புட்டுக் காட்டுகின்றது இந்த ஒப்புதல் வாக்குமூலம்.

நாட்டின் மீயுயர் சட்டமாக மதிக்கப்படுவது அரசமைப்பு. அதில் உள்ள – சட்ட ரீதியான ஏற்பாடுகள் – பொலிஸ், காணி அதிகாரப் பகிர்வுகள் – கடந்த முப்பத்தியிரண்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அடம் பிடிக்கின்றனர் தொடர்ச்சியாக அதிகாரத்துக்கு வந்த சிங்கள ஆட்சித் தலைவர்கள்.

1988இல் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் நாட்டின் அரசமைப்பில் சேர்க்கப்பட்டு விட்டது. அதை மாற்ற வேண்டும் என்பதோ, மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது என்பதோ வேறு, நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று அடம்பிடிப்பது வேறு. அது, உண்மையில் அரசமைப்புக்கு விரோதமான செயற்பாடு. சரியாக அர்த்தப்படுத்துவதானால் அது அரசமைப்பை மீறும் தேசத்துரோகம் என்றும் கூறக்கூடியது.

ஜனாதிபதியில் இருந்து, பிரதமரில் இருந்து, ஆட்சித் தரப்பின் கடைசிப் பிரமுகர் வரை கடந்த முப்பத்தியிரண்டு ஆண்டுகளாக நாட்டின் மீயுயர் சட்டத்தில் இருப்பதை நடைமுறைப்படுத்த மறுத்து நிற்பதை நீதி என்கின்றோம். அதை நடைமுறைப்படுத்த வலியுறுத்துவோரைப் பிரிவினைவாதிகள், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவோர் என்றெல்லாம் விமர்சிக்கின்றோம்.

இதில் இன்னொரு கூத்தும் உண்டு. அதையும் அமைச்சர் காமினி லொக்குகேயின் கூற்றுக்கு இடையில் நாம் அவதானிக்க முடியும்.

*"நாட்டின் இனப்பிரச்சினை என்பதொன்றும் கிடையாது. 2009 ஆம் ஆண்டுடன் இனப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது"* – என்றும் அவர் கூறுகின்றார்.

அமைச்சர் காமினி லொக்குகே கூறுவது போல, 2009 இல்தான் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதுவரையில் துப்பாக்கிகள் கனன்று கொண்டிருந்தன. பல்குழல் ஏவுகணைகள் சீறிக் கொண்டிருந்தன. பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன. குண்டுகள், கிளைமோர்கள் வெடித்துக் கொண்டிருந்தன.

அந்தக் காலத்தில் எல்லாம் உலகநாடுகள் எங்கும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான புலிகளையும் கூட்டிக் கொண்டு சென்று 'இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு – சமரச உடன்பாடு – காண்பதற்கான முயற்சிகளை' இலங்கை அரசு செய்து கொண்டிருந்தது. 'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வது' என்ற ஏற்பாட்டில் – சர்வதேச பங்களிப்புடன் – பேசுவது வரை இலங்கை அரசு முயற்சித்துக் கொண்டிருந்தது.

இப்போது அதே ஆட்சித்துறை, இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்கின்றது. இதன் அர்த்தம் என்ன?

விடுதலைப் புலகளின் தலைவர் பிரபாகரன் இருந்த போது – அவரது துப்பாக்கிகள் கனன்று, பல்குழல் ஏவுகணைகள் முழங்கி, பீரங்கிகள், கிளைமோர்கள், கண்ணிவெடிகள் பெரும் சத்தத்தோடு வெடித்துக் கொண்டிருந்தபோது இனப்பிரச்சினை பற்றிய குரல் தென்னிலங்கைக்கும், ஆட்சிப் பீடத்துக்கும், சர்வதேசத்துக்கும் அந்தச் சத்தத்தின் மத்தியில் உரத்த குரலாகக் கேட்டது.

ஆனால், இப்போது பேராயுதங்களினதும், போரினதும் சத்தம் அடங்கியதும், இனப்பிரச்சினை உலகினதும் காதில் விழவேயில்லை.

அந்தச் சத்தங்கள் கேட்டால்தான் தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தின் காதுகளில் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தரப்புகளின் குரல் விழும் போல.

**யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னம் அகற்றப்பட்டதைக் கண்டித்து அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சார்பில் அந்த ஒன்றியப் பொறுப்பாளர் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஊடகச் செய்தியொன்றை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார்.**

**இப்பிரச்சினை நேற்றுக் காலை சுமுகமான முடிவுக்கு வந்து விட்டபோதும், இந்த அறிக்கை சில விடயங்களைத் தாங்கி நிற்பதால் அது இங்கு பிரசுரமாகின்றது.**

**(ஆ - ர்)**

## இறந்தவர்களை நினைவு கூர்வது நாகரிக சமூகத்தில் ஓர் உரிமை!

### அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன.12

இறந்தவர்களை நினைவு கூர்வதென்பது ஜனநாயகத்தை மதிக்கும், மனிதநேயத்தை நேசிக்கும் எந்தவொரு நாகரிக சமூகத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டதற்கு எதிராவோம்!

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த இறந்தவர்களின் நினைவுச் சின்னத்தை உடைத்து பலவந்தமாக அகற்றப்பட்டுள்ளது.

08ஆம் திகதி இரவு இதை அகற்றத் தயாராகும் போது மாணவர்களும் பிரதேச மக்களும் எதிர்த்தமையால் பல்கலைக்கழகத்துக்கு ஆயுதப் படை வரவழைக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக நடைபெற்ற படுகொலை யுத்தத்தினால் ஆயிரக்கணக்கான மனிதர்கள் இறந்துள்ளனர். அங்கவீனமடைந்துள்ளனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சுருக்கமாகச் சொல்வதாயிருந்தால், அது, மனித நேயம் மரணித்த காலம். அந்த படுகொலை யுத்தத்தில் பலியாகிய தமது உறவினர்களை, நண்பர்களை, தமக்கு நெருக்கமானவர்களை நினைவு கூர்வதற்காக பல்கலைக் கழக மாணவர்கள் இந்த நினைவுச் சின்னத்தை நிர்மாணித்திருந்தனர்.

பொது சமூக நோக்கத்திற்காக, இறந்த மனிதர்கள் தெற்கிலும் நினைவு கூரப்படுகின்றனர். நினைவுச் சின்னங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. முப்பது வருட யுத்தத்தில் இறந்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் தூபிகள் தெற்கில் ஏராளமாக உள்ளன. அவர்கள் நினைவு கூரல் விழாக்களை நடத்துகின்றனர். இலவசக் கல்விக்காக நடத்தப்பட்ட போராட்டங்களில் அரசினால் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை நினைவு கூர்வதற்காக மாணவ வீரர் நினைவுத் தூபிகள் பல்கலைக் கழக மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. போராட்டத்தின் போது படுகொலை செய்யப்பட்ட மனிதர்களை நினைவு கூர்வதற்காக ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 20ஆம் திகதி பல்கலைக் கழகங்களில் மாணவ வீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதேபோன்று, 71 போராட்டத்தின் போது, 88 – 89 பயங்கர காலத்தில் கொலை செய்யப்பட்ட மனிதர்களை நினைவு கூர்வதற்கான நிகழ்ச்சிகள் தெற்கில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இறந்த மனிதர்களை நினைவு கூரும் அந்த உரிமை வடபுல மக்களுக்கும் அவ்வாறே கிடைக்க வேண்டும். அவர்கள் நடத்திய போராட்டம் நீதியானதா, அநீதியானதா என்பது தனியாகப் பேசப்பட வேண்டிய ஒன்று. அரசியல் கருத்து பேதங்கள் எதுவாக இருந்தாலும் தமக்காகத் தோற்றி நின்று இறந்தனர் எனக் கருதப்படும் மனிதர்களை நினைவு கூர வடபுல மக்களுக்கும் உரிமை உண்டு.

இது ஜனவரி 08 ஆம் திகதி நடந்த தனிப்பட்ட சம்பவமல்ல. இதற்கு முன்பும் வடபுலத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளை அரசாங்கம் தடை செய்தது. ஆயுதங்களைக் கொண்டு அவற்றைத் தடுத்தது. இப்போது இறந்தவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சின்னங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இது பல்கலைக் கழக நிர்வாகத்தின் செயலாகுமெனக் கூறி பல்கலைக் கழக மானியங்கள் ஆணையகமும், அரசாங்கமும் கை கழுவிக் கொள்ள தயாராகின்றன. ஆனால், இது அரசாங்கம் திட்டமிட்டு செய்த செயலாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

வடக்கில் இறந்தவர்கள் நினைவு கூரும் தினங்களைத் தடை செய்ய வேண்டுமென, சின்னங்களை அகற்ற வேண்டுமெனச் சொல்வது தீவிரவாதம் உருவாவதை தடுப்பதற்காம். ஆனால், ஆட்சியாளர்கள் அறிந்து கொண்டே தீவிரவாதம் வேரூன்றுவதற்காக மீண்டும் நிலத்தை செப்பனிடுகிறார்கள். நினைவுச் சின்னங்களை நிர்மாணிப்பதாலோ அல்லது நினைவு கூரல் நிகழ்ச்சிகளை நடத்துவதாலோ தீவிரவாதம் உருவாவதில்லை. அவற்றை மிதித்துச் சிதைத்து விடுவதால்தான். எனவே, தெற்கில் போன்றே வடக்கிலும் இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை உண்டென்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இறந்தவர்களை நினைவு கூர்வதென்பது ஜனநாயகத்தை மதிக்கும், மனிதநேயத்தை நேசிக்கும் எந்தவொரு நாகரிக சமூகத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையாகும்.

இந்த உரிமையை பறித்துவிட்டு காயப்பட்ட வடக்கின் இதயத்தில் மீண்டும் உதிரம் சிந்த வைக்கப் பார்க்கிறார்கள். ஆகவே, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இறந்தவர்களின் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டதை அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த தான்தோன்றித்தனமான தலையீடுக்கு எதிராகுமாறு ஜனநாயகத்தை, மனித நேயத்தை மதிக்கும் சகல மக்களிடமும் வேண்டுகிறோம். – என்றுள்ளது.

## விளையாட்டு மைதானத்தை அபகரிப்பதற்கு முயற்சி!

### திருகோணமலை அனந்தபுரியில் பதற்றம்


திருகோணமலை – அனந்தபுரி பகுதியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில், கடந்த ஞாயிற்றுக்கிழமை) அடாத்தாக வேலி அமைக்க, சிலர் முற்பட்டபோது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மிக நீண்ட காலமாக அனந்தபுரி பகுதியிலுள்ள இந்த மைதானம் அந்தப் பகுதி இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த மைதானத்துக்குப் பின்புறமாக உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காணிக்கு அருகே குறித்த கட்சியினரால் நேற்றுக் காலை வேலி அமைக்கப்பட்டதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்தே அந்தக் கட்சியினருக்கும் அந்தப் பகுதி இளைஞர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மைதானமானது பல அரசியல் தலைமைகளது உதவியுடன் புனரமைக்கப்பட்டு,



தற்போதும் இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு இருக்க, இதனை அபகரிக்கப் பலர் முற்படுகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் மைதானம் இல்லாது போனால், இளைஞர்கள் பிழையான வழிமுறைகளுக்கு உட்படக்கூடும் என்பதால், மைதானத்தை மீட்டுத்தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானுக்கு எதிரான ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கை இனிமேல் தொடர்வதில்லை

## மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்குச் சட்டமா அதிபர் அறிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பான வழக்கைத் தொடர்ந்தும் நடத்துவதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கின் தீர்ப்பு நாளை புதன்கிழமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி நத்தார் ஆராதனையின்



போது மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி உட்பட பொதுமக்கள் 7 பேர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேநேரம், சட்டமா அதிபரின் ஒப்புதலைத் தொடர்ந்து கடந்த நவம்பர் மாதம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்குப் பிணை வழங்கியது.

தன் மீதான குற்றச்சாட்டுப் போலியான வாக்குமூலங்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டது எனவும், இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்த வேண்டும் எனவும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்தில் தனது கன்னி உரையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் சில பிரதேசங்கள் தனிமையிலிருந்து விடுவிப்பு!

கொழும்பு மாவட்டத்தில் சில பகுதிகள் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கிரேண்ட்பாஸ், மாளிகாவத்தை, தெமட்டகொடை முதலான பொலிஸ் அதிகாரப் பிரிவுகள் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின், வத்தளை பொலிஸ் அதிகார பிரிவின் வெலிக்கடமுல்ல கிராம சேவகர் பிரிவின் துவ வத்த, கிரிபத்கொடை பொலிஸ் அதிகார பிரிவின் ஹுணுப்பிட்டி, வடக்கு கிராம சேவகர் பிரிவின் வெடிகந்த மற்றும் நீர்கொழும்பு பொலிஸ் அதிகார பிரிவின் தல்துவ கிராம சேவகர் பிரிவின் எம்.சி வீடமைப்பு யோசனைத் திட்டம் என்பன நேற்று அதிகாலை 5 மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், கோத்தமிபுர தொடர்மாடி குடியிருப்பு, பொரளை - கோத்தமிபுரயின் 24 ஆம் தோட்டம், 78 ஆம் தோட்டம் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் தனி மைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இதுவரையில் தனிமைப்படுத்தப் பட்டுள்ள ஏனைய பிரதேசங்கள் மீண்டும் அறிவிக்கும் வரையில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் பிரதேசங்கள் என்ற ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன என கொவிட் 19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் அறிவித்துள்ளார்.

## ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க மாற்றுத்திட்டம்; அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என்கின்றார் நிமல்!



தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்துடன் இடம்பெற்ற பேச்சில் இணக்கப்பாடு எட்டப்படாதமையால் மாற்றுத் திட்டம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

வரவு – செலவு திட்டத்தில் அரசாங்கத்தின் பரிந்துரைக்கமைய தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற பேச்சு இணக்கப்பாடு இன்றி முடிவுற்றுள்ள நிலையில் அடுத்த கட்டமாக மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச்சம்பளம் ஆயிரம் ரூபா என்ற அரசாங்கத்தின் வரவு – செலவு திட்ட பிரேரணை தொடர்பில், தொழில் அமைச்சில் கடந்த 7ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் தோட்ட நிறுவனங்களின் நிர்வாகிகள், முதலாளிமார் மற்றும் தோட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இருந்தபோதும் இந்தக் கலந்துரையாடலில் பொதுவான இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போயிருந்தது. அதனால் இதுதொடர்பாக மாற்று யோசனை ஒன்றை இன்றைய அமைச்சரவை கூடும்போது சமர்ப்பிக்க இருக்கின்றேன்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை ஒருபோதும் மாற்ற மாட்டோம். இதுதொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக இரண்டு தரப்பினருக்கும் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்திருந்தோம்.

என்றாலும் இறுதித் தீர்மானம் ஒன்றுக்கு வர முடியாமல் போனமையால், தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதற்காக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுப்பதற்கான மாற்றுத்திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கத் தீர்மானித்தேன். அதன் பின்னர் விரைவில் குறித்த ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். – என்றார்.

## தங்கச் சங்கிலி அபகரித்தவர் நீரில் மூழ்கி பரிதாபகர சாவு!

அம்பலங்கொட – மீட்டியாகொட பகுதியில் பெண் தாதி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்ற சந்தேக நபர் நீரில் மூழ்கி உயிரிழுந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

அம்பலங்கொட – மீட்டியாகொட பகுதியில் மல்வென்ன ரயில் பாதைக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற குறித்த சந்தேகநபர் அந்த வழியில் சென்று கொண்டிருந்த 36 வயதுடைய பெண் தாதி ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது பிரதேசவாசிகள் அவரை விரட்டிப் பிடிப்பதற்காக , துரத்திச் சென்றுள்ளனர். பின்னர் சந்தேக நபர் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் எண்ணத்தில் அங்கிருந்த கால்வாயில் பாய்ந்துள்ளார்.

நீரில் மூழ்கிக்கொண்டிருந்த நபரை பிரதேச வாசிகள் இணைந்து மீட்டு ஹிக்கடுவ – ஆராச்சிகந்த வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

எனினும் அவர் வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கு முன்னரே உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால், இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன எனவும் , அதனால் மக்கள் நடமாட்டம் குறைவான மற்றும் வெளிச்சம் குறைவான பகுதிகளில் செல்லும் பெண்கள் இந்த திருடர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் பெலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

## பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகள் உட்பட 17 பேருக்கு மறியல் நீடிப்பு!

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களை போதைப்பொருள் கடத்தற்காரர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் 13 அதிகாரிகள் உட்பட 17 நபர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

அதன்படி சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணத்துக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா!

## போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே திட்டவட்டம்



வடக்கு , கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல வேறு எந்தவொரு மாகாணத்திற்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் பிரித்து வழங்கப்பட மாட்டா. மாகாண சபை முறைமையில் ஒருசில குறைப் பாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகள் திருத் தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத் தப்படும்.

– இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்–

இனப்பிரச்சினை என்று கூறிக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் தேடிக் கொள்கி றார்கள். தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறிக் கொள்பவர்கள் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை களுக்குத் தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. மாகாணசபைத் தேர்தல் உரிமை வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடமிருந்து இல்லாமல் போனமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்புக் கூற வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமை யாகச் செயற்படுத்துமாறு ஆரம்ப காலத்தில் இருந்து பலதரப்பினரால் அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. 13 ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்தினால் நாட்டில் மாறுபட்ட பல பிரச்சினைகள் தோற்றம் பெறும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் ஒரு மாகாணத்துக்கு மாத்திரம் பிரித்து வழங்கினால் அங்கு சுயாட்சி தன் மையே நிலவும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரமல்ல எந்த மாகா ணங்களுக்கும் ஒருபோதும் பிரித்து வழங்கப்படமாட் டாது. இந்த விடயத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்கள் விதிவிலக்கல்ல. ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், சலுகைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. நாட் டில் இனப்பிரச்சினை என்பதொன்று கிடையாது. 2009 ஆம் ஆண்டுடன் இனப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாணசபை முறைமை நாட்டுக்கு அவசியம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மாகாண சபை முறைமையில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின் றன. அவை திருத்தப்பட்டு மாகாண சபைத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும். எந்த இன மக்களின் உரிமைகளையும் பறிக்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்குக் கிடையாது. பொது சட்டத்துக்கு அனைத்து இன மக்களும் கட்டுப்பட்டால் எவ்வித பிரச் சினைகளும் தோற்றம் பெறாது. – என்றார்.

# ஐ.தே.கவின் செயற்குழு நாளை கூடுகின்றது!

## தலைமையில் மாற்றம் இல்லை

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் நாளை புதன்கிழமை காலை சிறிகொத்தாவில் கூடுகின்ற நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர் பான தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. எனினும் கட்சியின் தலைமைத்துவத் தில் இப்போதைக்கு மாற்றங்கள் ஏற்படப்போவ தில்லை என கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள், கட்சியின் தலைமைத்துவ மாற்றம் மற்றும் தேசிய பட்டியல் உறுப்பினர் யார் என்பது தொடர்பாக நீண்டகால பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கான தீர்வுகளை எட்டு வதில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு முடியவில்லை. இந்நிலையில் நாளை புதன்கிழமை காலையில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுவைக் கூட்டி மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க கட்சியின் தலை வர் ரணில் விக்கிரமசிங்க தயாராகியுள்ளார்.

இந்நிலையில், செயற்குழு கூட்டத்திற்கு கட்சி யின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் உறுப்பினர் இன்னமும் தெரிவு செய்யப்படாதுள்ள நிலையில் நாளை கூடும் கூட்டத்தில் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் யார் என்பது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்ப டவுள்ளமையும் குறிப்பிடதக்கது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பலரிடம் பி.சி.ஆர். சோதனை



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு கொரோனா தொற்றாளர் கடந்த சனிக்கிழமை அடையாளம் காணப்பட்ட நிலையில் அவ ருடன் தொடர்பைப் பேணிய முப்பது பேர்களுக்கு மேல் தனி மைப்படுத்தப்பட்டு உள்ளமையோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 25 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வண்ணாங்குளம் கிராமத்தில் வசிக்கின்ற நபர் ஒருவர் தன்னுடைய உறவினர் வீட்டுக்கு வவுனியாவுக்கு சென்று வந்துள்ள நிலையில் வவுனியாவில் உள்ள அவருடைய உறவினருக்குக் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த நபர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஞாயிறு மாலை வெளி யான பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அந்த நபருக்கு கொரோனாத் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அந்த நபருடன் தொடர்பில் இருந்த நபர்களை அடையாளப்படுத்தி தனிமைப்படுத்துகின்ற நடவடிக்கைகளை முல்லைத்தீவு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி தலைமை யிலான குழுவினர் ஞாயிறு மாலை முதல் இரவிரவாக முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் அந்த நபருடன் தொடர்புகளைப் பேணிய சுமார் 30 பேருக்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளமையோடு ஞாயிறு மாலை சுமார் 25 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனை களும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மலையகத்தில் கல்வி நடவடிக்கை!







நாட்டில் நிலவி வரும் கொரோனா பரவல் அசா தாரண சூழ்நிலையில் 2021 ஆம் ஆண்டின் முதல் தவணைக்கான பாடசாலை நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின் பற்றி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வலயக் கல்வி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிப்புரையின் அடிப்படையில் பாட சாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத் தலின் பிரகாரம் மாணவர்கள் பாடசாலைகளுக்க உள்வாங்கப்பட்டுள்ளனர்.

சமூக இடைவெளி பேணல், கை கழுவுதல், உடல் வெப்பநிலை அறிதல், போக்குவரத்து என சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு முதல் தவணைக்கான வகுப்புகள் தரம் 02 முதல் தரம் 13 வரையிலானவை நேற்றைய தினம் ஆரம்பமா கியுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, ஹற்றன், வலப்பனை, கொத்மலை, ஹங்குராங்கெத்தை ஆகிய ஐந்து கல்வி வலயங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட வட்ட வளை மவுன்ஜின் தோட்டத்தில் அமைந்துள்ள பாட சாலை கல்வி நடவடிக்கைகள் மாத்திரம் இடை நிறுத்தப்பட்டு பாடசாலை மூடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அதிகமாகக் காணப் படுகின்ற காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளதாகக் கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏனைய கல்வி வலயங்களில் வழமை போன்ற கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்ற நிலையில் மாணவர்களின் வருகையும் பாதிப்பற்ற வகையில் காணப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகக் கடந்த ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரை நாட்டில் பாடசா லைக் கல்வி நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. மாணவர்களும் கல்வி நிலையில் பாதிப்புகளை எதிர்கொண்டு வந்தநிலையில் ஆரம்ப கல்வி மாணவர்கள் பாதியளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அந்தவகையில் பத்து மாதங்களுக்கு பின் முறையான கல்வி நடவடிக்கையில் ஆரம்ப கல்வி மாணவர்கள் முதல் அனைவரும் காலடி எடுத்து வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்:

# இலங்கையில் ஒருவருக்கு எதிராகக்கூட எவ்வித குற்றச்சாட்டும் தாக்கல் இல்லை!




இலங்கையில் ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பான எவரும் இதுவரை நீதிமன் றின் மூலம் தண்டிக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ர மரத்ன, அமெரிக்காவில் மூன்று பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமையைச் சுட்டிக் காட்டினார்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றபோது நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன எனக் குறிப்பிட்ட அவர், தற்போது வேறு வேறு காட்சிகளாக இருந்தாலும் இவற்றை மறுப்பதாகக் கூறினார்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ருவான் விஜேவர்த்தனவிற்கோ எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் எரான் விக்ரமரத்ன குறிப்பிட்டார்.

எனவே, இந்த விவகாரத்தில் பொறுப் புக் கூறவேண்டிய இந்த அரசாங்கம் கைது நடவடிக்கைகளை மட்டும் செய்யா மல் அவர்களை நீதிமன்றங்களில் முன் னிலைப்படுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எரான் விக்ரமரத்ன கேட்டுக்கொண்டார்.

காலைக்கதிர் நேற்றைய மாலைப்பதிப்பின் ஆசிரிய தலையங்கம் இது. தற்போதைய நிலைமைகளின் முக்கியத்துவம் கருதி இன்று அது மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.

(ஆசிரியர்)

# அறுபது மணி நேரப் பட்டறிவு

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' என்பார்கள். அப்படித்தான் முடிந்திருக்கின்றது யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் அதிரடியாக ஆரம்பித்து வைத்த கலகமும் என்று தோன்றுகின்றது.

உச்சத்தில் இருந்து ஒரே நாளில் வில்லன் ஸ்தானத்துக்கு வீழ்ந்த யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, மீண்டும் ஒரே இரவில் தன்னை கதாநாயகன் அந்தஸ்துக்கு துணிச்சலுடன் தூக்கி நிறுத்தி, தான் அலங்கரிக்கும் பதவி நிலையின் தனித்துவச் சிறப்பை உலகுக்கு எடுத்தியம்பி நிற்கின்றார்.

எந்தப் பத்தியில் அவரை வைதோமோ அந்தப் பத்தியில் அவரைப் பாராட்டி மெச்சும் கைங்கரியத்தை ஓரிரு தினங்களுக்குள் ஆற்றச் செய்யும் அதிசயத்தை அவர் புரிந்திருக்கின்றார்.

இத்தகைய ஓர் இக்கட்டுச் சூழலிலும் – இவ்வளவு பின்னடைவுக்குப் பின்னரும் – தம்மைச் சுதாகரித்துக் கொண்டு, உடைத்த நினைவுத் தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் மூலமே – சட்ட ரீதியாகவே – மீள அமைத்துக் கொடுப்பது என்ற தீர்மானத்தை எடுத்து, அதற்கான அனுமதியையும் மேலிடத்தில் போராடிப் பெற்று, விரைந்து அதைச் செயற்படுத்த எடுத்த அவரின் தற்றுணிவு மெச்சத்தக்கது.

இது, விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என சமாளிப்பு அல்ல. வீழ்ந்தாலும் எழுவோம் என்ற பீனிக்ஸ் பறவையின் மீளெழுச்சி. பின்னடைவிலும் நியாயத்தை நிறுத்தும் தைரியம்.

தன்னுடைய தனிப்பட்ட செயற்பாட்டுக்கு, நடவடிக்கைக்கு விடுக்கப்பட்ட சவாலாக இதைக் கருதாமல், சமுதாயத்துக்கு எழுந்துள்ள நெருக்கடியாகக் கருதி, அவர் கையாண்டமையால்தான் இத்தகைய துணிச்சலான முடிவு ஒன்றைத் தீர்மானிக்க அவரால் இயன்றிருக்கின்றது எனக் கருதுகின்றோம்.

பல்கலைக்கழகத்தை ஒட்டி வெடித்த ஒரு போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது என்பதிலும் பார்க்க, யாழ் பல்கலைக்கழக சமூகத்தை பிளவுபட விடாமல் கட்டிக்காப்பதற்கு, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா எடுத்த மீட்பு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த அறுபது மணி நேரத்தில் கட்டவிழ்ந்த சம்பவங்களும் அவற்றின் அதிர்வுகளும் பல படிப்பினைகளை, அனுபவங்களை, இவற்றை எல்லாம் கடந்து தமிழ் சமூகத்துக்குப் போதுமான மனத்தெம்பையும் தைரியத்தையும் தந்து நிற்கின்றன என்பது கண்கூடு.

விடுதலைப் போராட்டப் பின்னடைவுகளுக்குப் பின்னரும்–

அரசியல் ரீதியான பிளவுபாடுகள், குழு மோதல்களுக்குப் பின்னரும் –

போரியல் ரீதியான பாதிப்புகள், இழப்புகளுக்குப் பின்னரும் –

நாங்கள் தனித்து இருக்கவில்லை, பிளவுபட்டுச் சிதறுண்டு சின்னாபின்னமாகிவிடவில்லை, எமக்கென்று வலுவான ஆதரவு தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர் தேசங்களில் மட்டுமல்ல, தாய்த் தமிழகத்திலும், இந்தியாவிலும் அதற்கப்பால் பரந்த உலகெங்கும் உள்ளது என்ற மனத்தெம்பையும் தைரியத்தையும் இந்த அறுபது மணி நேரத்துக்குள் உலகெங்கும் இருந்து பீறிட்ட உணர்வெழுச்சி நமக்குத் தந்து நிற்கின்றது.

போராட்டம் நடத்திய மாணவர்கள் அந்நியர்கள் அல்லர், பல்கலைக்கழக நிர்வாகத்துக்குத் தொல்லை தரும் சக்திகளும் அல்லர், அவர்கள் எனது மாணவர்கள், என் பிள்ளைகள் என்றுரைத்தமையின் மூலம் – அதையும் கூட இத்துணை எதிர்ப்பு நெருக்கடிகளுக்குப் பின்னரும் துணைவேந்தரே நேரடியாகக் கூறியமையின் மூலம் – யாழ் பல்கலைக்கழகம் பிளவுண்டு நிற்கவில்லை, கருத்து முரண்பாட்டால் பிளவுபட்டும், ஐக்கியப்பட்டே உள்ளது என்ற உண்மை உரத்து உரைக்கப்பட்டிருக்கின்றது.

அது மட்டுமல்ல, நமது உரிமைகளில் ஒன்றான நினைவேந்தல் உரிமையை நிலைநாட்டும் தீவிரத்தில் தமிழர்களுடன் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களும் ஒன்றித்தே நிற்கின்றார்கள் என்ற உண்மையை – யதார்த்தத்தை – இன்றைய களநிலைமை எமக்கு எடுத்தியம்பி இருக்கின்றது.

கொள்கை, கோட்பாடு ரீதியாகத் தமிழ்த் தேசிய சக்திகளும், கட்சிகளும் பிளவுபட்டு நின்றாலும் உரிமைக் கோரிக்கை என்ற தளத்தில் அவர்கள் ஒன்றிணையக் கூடிய வாய்ப்பான களப்புறச் சூழல் தாராளமாகத் திறந்தே உள்ளது என்ற நிலைமை எமக்கு இந்த அறுபது மணி நேரத்தில் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

பல்கலைக்கழக சமூகம் – குறிப்பாக மாணவர் சக்தி – காத்திரமான அதிர்வு அலைகளை ஏற்படுத்தக் கூடிய வலிமையில் தான் நம்மிடம் உள்ளது என்ற அகக் கண்ணை தமிழ் அரசியல் சக்திகளுக்கு இந்த நிகழ்வு படம்போட்டுக் காட்டியிருக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உரிமைகள் விடயத்தில் அடிமைப்பட்டுப் போகாதே, எழுச்சியுடன் பீனிக்ஸ் பறவைபோல மீண்டுவா, நாளை நமதே என்ற செய்தியை – மன வலிமையை – ஓர்மத்தை பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் மூலம் நம் தமிழினத்துக்கு உணர்த்த இந்த அறுபது மணி நேர நிகழ்வு வழி செய்திருக்கின்றது.

# ஐக்கிய நாடுகள் வதிவிட பிரதிநிதியுடன் விக்னேஸ்வரன் நேற்று விரிவான பேச்சு

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் வதிவிட பிரதிநிதி ஹெனா சிங்கர் அழைப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று மதியம் அவரின் அலுவலகத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தார் என தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரவு தெரிவித்தது

அப்போது பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. போரின் பின்னரான வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை, தேர்தலின் பின்னர் அங்கு காணப்படும் நிலைமை, கட்சிகளின் நிலைவரம், அவர்களிடையேயான வேற்றுமைகள், ஐக்கிய நாடுகள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு நன்மையை வழங்கலாம் என்பது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

அதன் பின்னர் ஜெனிவாவில் வரும் மார்ச் மாதத்தில் எடுக்கவி ருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் மற்றும் வருங்காலத்தில் பொருளாதார ரீதியாக வட கிழக்கு மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையால் செய்யக்கூடிய நன்மைகள் எவை என்பது பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார் வதிவிடப் பிரதிநிதி ஹெனா சிங்கர்.

அதற்கு பதிலளித்த நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தெற்கிலிருந்து வடக்கு, கிழக்கு நோக்கிப் பயணித்தால் போரின் பின்னர் வடகிழக்கிற்கு ஏதேனும் நன்மைகள் பெற்றுக் கொள்ளப்பட்டனவா என்று அறிந்து கொள்ளலாம் எனப் பதிலளித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த ஹெனா சிங்கர், தான் ஒரு முறை தான் வடக்கு நோக்கி வந்தார் எனவும் அவ்விடங்கள் கிராமப்புறங்கள் போல காட்சியளிப்பதாகவும் கூறினார்.

அதற்கு பதிலளித்த நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் போரின் பின் 11 வருடங்களாகியும் வடக்கு மாகாண நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றார். அவ்வாறு முன்னேற்றம் ஏற் படுவதை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை என்பதே யதார்த்தம் என்றார்.

தேர்தல் பற்றி குறிப்பிடும் போது, கொள்கைகளில் இருந்து பிறழ்ந்ததனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி வெகுவாக குறைந்தது என்று கூறினார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதனுடைய ஆரம்பகால முக்கிய குறிக்கோள்களை மறந்து விட்டதால்தான் மக்கள் மற்றைய கட்சிகளை நாட வேண்டியிருந்தது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு போரின் போதும் அதன் பின்னரும் நேர்ந்தவற்றைப் பற்றி முற்றாக அறிந்து கொண்டால்தான் ஐக்கிய நாடுகள் சபை வடகிழக்கிற்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம். தமிழ் மக்களுக்கு நேர்ந்த பல கொடூரங்களையும் துன்பியல் நிகழ்வுகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டால்தான் தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்று அறிந்து கொள்ளலாம்.

முதலாவது - அவர்களுக்கு நியாயமான அரசியல்தீர்வு வேண்டும்.

இரண்டாவது - அங்குள்ள மாணவ,மாணவியரின் கல்வி நிலை உயர வேண்டும்.

மூன்றாவது-தொழில்களை உருவாக்கப் பல செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். விவசாயம் சம்பந்தமாகவும் மீன்பிடி சம்பந்தமாகவும் நவீன அணுகுமுறைகளை அறிமுகம் செய்துவைக்க வேண்டும். குளங்கள் தூர் வாரப்பட்டு புனருத்தாரணஞ் செய்யப்பட வேண்டும். உள்நாட்டு மீன்வகைகள் இவற்றில் வளர்க்கப்பட வேண்டும். கிராமங்கள் தோறும் இருக்கும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டும். அங்கு கணனி வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

உள்ளூர் கிராம வீதிகள் செப்பனிடப்பட வேண்டும். வடக்கையும் கிழக்கையும் கிழக்குக் கரையோரமாக இணைக்கக் கடுகதி பெருந்தெருவொன்று அமைக்கப்பட வேண்டும் என்று கூறி இவ்வாறு பல விடயங்களை வதிவிடப் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்தினார்.

முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உயரதிகாரிகள் வந்த போது அவர்களிடம் கையளிக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளை ஹெனா சிங்கரிடம் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் கையளித்தார்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுமா என்று கேட்ட போது இந்தியாவின் அனுசரணை இல்லாமல் 13 வது திருத்தச் சட்டத்தை கைவாங்க முடியாது என்று கூறி, தமிழர்களுக்குக் கூடிய வலுவுள்ள ஓர் அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தாலேயொழிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க இந்தியா இடமளிக்காது என்று கூறினார்.

இவ்வாறு பலவாறான விடயங்கள் இரு தரப்பினரிடையேயும் ஆராயப்பட்டன. இவற்றில் மார்ச் மாதம் கூடவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு தமிழர் சார்பில் முன் வைக்கப்படப்போகும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. - இவ்வாறு ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது

# கிளிநொச்சி தனிமைப்படுத்தல் மையத்தில் வழங்கப்பட்ட சோற்றுப் பார்சலில் புழுக்கள்



கிளிநொச்சி கிருஷ்ணபுரம் தனிமைப்படுத்தல் மையத்தில் நேற்று மதியம் வழங்கப்பட்ட உணவில் புழுக்கள் காணப்படுள்ளன என அங்கு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று மதியம் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் புழுக்கள் காணப்பட்டன எனவும் உணவுகள் பார்சல் மூலம் வழங்கப்படுவதாகவும் அதனை கதிரை ஒன்றில் வைத்துவிட்டு சென்று விட்டார்கள், அதன் போது உணவு உண்ணும்போதே புழுக்கள் காணப்பட்டன எனவும் அவர்கள் தெரிவித்தனர்

அது தொடர்பாக தனிமைப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் தெரிவிக்க முற்பட்ட போதும் அவ்விடயம் கருத்திலெடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதுதொடர்பில்வவுனியா வவுனியா வடக்கு சுகாதார சேவைகள் பணிமனைக்கும் தெரியப்படுத்தப்ப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்பின் பின்னணியில் இந்தியா?

## அரியநேத்திரன் சந்தேகம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் வருகைக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அரியநேத்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம் குடும்ப ஆட்சியைதான் கொண்டு செல்கின்றது.

இவ்வாறு குடும்ப ஆட்சி நடைபெறுகின்றமையால் பல்வேறுபட்ட அச்சுறுதல்கள் மற்றும் தடைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

பல்வேறுப்பட்ட நினைவு தினங்களை நடத்த முடியாத சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்கு வருகைதந்து சென்ற மறுதினமே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டுள்ளமையால், அவர்களின் ஆதரவு இருக்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

சிலவேளை இருக்கலாம். இல்லையென்று கூறமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. இவ்வாறு தான் முள்ளிவாய்க்கால் நடைபெற்ற இறுதிப் போரில் கூட இந்தியாவின் பங்களிப்பு இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நேற்றுக் காலை முழு கடையடைப்பின் போது

## முடங்கியது யாழ்ப்பாணம் ...













## முடங்கியது கிளிநொச்சி ...











## முடங்கியது முல்லைத்தீவு ...







## முடங்கியது ஏறாவூர் ...







# நான் பாதுகாப்புச் செயலராக இருந்தபோது நாயைபோல் புலிகளை சுட்டு வீழ்த்தினேன்!



## இம்முறையும் கொண்டுவர முடியும் எனக் கோட்டாபய வீறாப்பு பேச்சு

ஜனாதிபதி என்ற கதாபாத்திரத்தை விட பாதுகாப்பு செயலாளர் என்ற கதாபாத்திரத்தையே மகாசங்கத்தினர் அதிகம் எதிர்பார்க்கிறார்கள். நான் பாதுகாப்புச் செயலாளராக இருந்த வேளை நந்திக் கடலில் நாயைப் போல் புலிகளைச் சுட்டு வீழ்த்தினேன். தேவையாயின் பாதுகாப்பு செயலாளர் என்ற கதாபாத்திரத்திலும் செயற்படத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அரசியல் நோக்கங்களின்றி நாட்டு மக்களுக்குச் சேவையாற்றத் தயாராக உள்ளேன். அரசியல் நோக்கங்களுடன் செயற்படத்தயாரில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை அம்பாறை உஹனவில - லாத்துகல கிராமத்தில் இடம்பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படத் தயாரில்லை. அரசியல் பழிவாங்கள் இல்லாமல் சிறந்த முறையில் செயற்படத் தயாராக உள்ளோம். சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்பட்டவர்கள், சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். இதனை எதிர்த்தரப்பினர் தெரிந்து கொள்ள மறுக்கிறார்கள். எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் நாடாளுமன்றில் ஆற்றிய உரை ஏற்றுக் கொள்ள முடியாதது.

கடந்த கால முறைமைகளை விட வித்தியாசமான முறையில் செயற்பட எதிர்பார்த்துள்ளோம். மகாசங்கத்தினரும் இதனையே எதிர்பார்க்கிறார்கள். அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயற்படத் தயாராக இல்லை. நந்தசேன கோத்தாபயவின் 2 கதாபாத்திரங்களில் ஜனாதிபதி என்ற கதாபாத்திரம் வேண்டாம். முன்பு இருந்த பாதுகாப்பு செயலாளர் என்ற கதாபாத்திரம் வேண்டும் என மகாசங்கத்தினர் கோருகிறார்கள். சற்று இறுக்கமாகச் செயற்பட வேண்டும் என்கின்றனர். அதனையும் செய்ய முடியும். கடினமான முறையில் செயற்பட்டால் இறுக்கமாகவும் என்னால் செயற்பட முடியும்.

பித்தளை சந்தியில் குண்டுத்தாக்குதலை நடத்தி பிரபாகரன் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தார். நான் பாதுகாப்பு செயலாளராக செயற்பட்ட காலத்தில் நாயை போல் விடுதலைப் புலிகள் அமைப்பை நந்திக்கடலில் வீழ்த்தினோம். இம்முறைமைக்கும் கொண்டு வர முடியும். அனைத்து சவால்களையும் வெற்றி கொள்ளும் கதாபாத்திரம் நான். நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதே எனது நோக்கம். - என்றார்.

## மன்னாரில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று!

மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் கடந்த 6 ஆம் திகதி எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், கடந்த புதன்கிழமை மதியம் மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் மக்களிடம் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள், உணவகம், வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்கள், ஓட்டோச் சாரதிகள், பயணிகள் என பலதரப்பட்டவர்களிடமும் எழுந்தமானமாக பி.சி.ஆர். பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் குறித்த பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியாகியுள்ளன. சுமார் 200 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக புத்தளம் அரச போக்குவரத்து சேவையில் கடமையாற்றும் நடத்துநர் ஒருவருக்கும் மன்னார் அரச பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஆடை விற்பனை நிலையத்தை நடத்தி வரும் காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் தொடர்பில் உள்ள முதல் நிலை தொடர்பாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. - என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் இலங்கைத் தூதர் உட்பட தூதரகத்தில் நால்வருக்குக் கொரோனா!

வொஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் இன்று முதல் மீளத் திறக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களால் கடந்த நான்காம் திகதி முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) முதல் வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வழமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அமெரிக்காவுக்கான இலங்கை தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத ஆரியசிங்க உள்ளிட்ட தூதரக பணியாளர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறைச்சாலைக்குள் வீசப்பட்டுக் கிடந்தது தடைசெய்த பொருள்கள் அடங்கிய பொதி!



களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேல் தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் அடங்கிய பொதியொன்று எறியப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேல் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இவ்வாறு தடைசெய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய பொதியொன்று எறியப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பொதியிலிருந்து 4 தொலைபேசிகள் , 7 சிம் அட்டைகள், 10 கிராம் கேரளாக் கஞ்சா , ஐஸ் போதைப்பொருள் அடங்கிய இரு பக்கெற்றுகள் மற்றும் 12 புகையிலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலையின் அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளின் போதே பொதி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சிறைக்கைதிகளுக்கு வழங்கும் நோக்கத்திலே இவ்வாறு யாராவது எறிந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாசுதேவவுக்கும் கொரோனா உறுதி!

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டபட்ட ரவூப் ஹக்கீமுடன் தொடர்பைப் பேணிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் இது வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என நாடாளுமன்றத் தொடர்பாடல்



பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர் உட்பட 300 பேரிடம் ரெபிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### விவசாயம் தொடர்பான முக்கிய அரச நிறுவனங்கள்

- ★ நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் ( RRDI ) பத்தலகொட
- ★ பூங்காவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் ( HORDI ) இ கன்னொருவை
- ★ பழ பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் ( FRDI ) ஹொரண
- ★ களம் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் ( FCRDI ) மஹாஇலுப்பல்லம
- ★ விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் ( SPMDC ) பேராதனை
- ★ விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம் ( ETC ) பேராதனை
- ★ விதைச் சான்றிதழ் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையம்( SCPPC ) கன்னொறுவை
- ★ சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையம் ( SEPC )பேராதனை
- ★ தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் ICC
- ★ இயற்கை வள முகாமைத்துவ நிலையம் NRMC

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

## வெற்றியுடன் முடிவுக்கு வந்தது மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம்

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு மீண்டும் அடிக்கல்; சட்டபூர்வமாகக் கட்டப்படும் எனத் துணைவேந்தர் உறுதி!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம். ஜன. 11

யாழ். பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அதே இடத்தில் நிறுவுவதற்கான அடிக்கல் இன்று காலை துணைவேந்தர் மற்றும் மாணவர்கள் ஆகியோரால் நாட்டப்பட்டது.

சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்று முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவால் உறுதியளிக்கப்பட்டது. அதன்படி அவரால் அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கி மூன்றாவது நாளாகத் தொடர்ந்த மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தையும் துணைவேந்தர் முடித்து வைத்தார்.

இன்று காலை 7 மணியளவில் துணைவேந்தர், மாணவர்களுடன் பல்கலைக்கழத்தினுள் செல்ல முற்பட்டபோது பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனையும் மீறி துணைவேந்தர் மாணவர்களைஅழைத்துக்கொண்டு வளாகத்தினுள் சென்று பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

தொடர்ந்து நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்துக்கு மாணவர்களுடன் துணைவேந்தர் சென்றபோது அங்கு வந்திருந்த கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அதன்போது , துணைவேந்தர், நாம் தற்போது எந்தவிதக் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடவில்லை. தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டப் போகின்றோம். என்னுடைய மாணவர்கள் மூன்று நாள்களாக உண்ணா விரதபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனை முடித்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளேன். எம்மைத் தடுக்காதீர்கள் என்றார்.

அதையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களை நினைவிடத்துக்குச் செல்வதற்கு அனுமதியளித்தார்.

## தூபி இடித்தழிப்புக்கு எதிராக முடங்கியது வடக்கு – கிழக்கு!

### வெறிச்சோடிக் காணப்பட்டன பிரதான நகரங்கள்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 11

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி இர வோடிரவாக இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிர்ப் புத் தெரிவித்துத் தமிழ்பேசும் மக்களின் தாய கமான வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த் தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் வடக்கு – கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதனால் வடக்கு - கிழக்கு வர்த்தக சங்கங்கள், கடற்றொழில் சங்கங்கள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பொது அமைப்புகள் எனப் பல அமைப் புகள் ஆதரவு வழங்கின.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை. அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன. அரச பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டன. பாடசா லைகளின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன.

இதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திரு கோணமலை ஆகிய மாவட்டங்களின் பிரதான நகரங்கள் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்தக் ஹர்த்தால் போராட்டத்துக்கு முஸ்லிம் சமூகத்தினரும், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனின் வீடும் தனிமைப்படுத்தலில்!

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் யாழ்ப்பாண வதிவிடத்துக்கும் தனிமைப்படுத்தலுக்கான அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்ற 'லொபி'யில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் உரையாடியபடி சுமந்திரன் கஞ்சி அருந்தியுள்ளார்.

ரவூப் ஹக்கீமுக்கு கொரோனாத் தொற்று உண்டென நேற்று தெரியப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து நாடாளுமன்ற அவருடன் நெருங்கிப் பழகிய 15 எம்.பிக்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

கடந்தசனிக்கிழமையாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுமந்திரனுக்கு நேற்றுமேற்படிவிடயம்அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் இன்று காலை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டார்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸாரால் சுமந்திரனின் யாழ். வதிவிடத்துக்கு தனிமைப்படுத்தல் அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது. அவரது வீட்டுக்கு அருகிலுள்ள வீடும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சர் வாசுவுக்கும் கொரோனாத் தொற்று



அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இன்று காலை அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்ற படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தள்ளார்.

இதன்படி இலங்கையில் இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

ஏற்கனவே இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீ முக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டிருந்தது. இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுகாதார விதிமுறைகளை மீறும் அலுவலகங்களுக்கு இனி ஆப்பு

### பொலிஸார் விசேட நடவடிக்கை



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலைமை தொடரும் சூழலில், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில்

பொது இடங்கள், நிறுவனங்கள் மற் றும் வர்த்க நிலையங்களில் சுகாதார ஒழுங்கு விதிகள் முறையாக பின்பற்றப் படுகின்றனவா என்பதனை ஆராய்வதற்காக விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைய இன்று முதல்மேல்மாகாணத்தில் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு வருகை தரும் அனைத்து நபர்களின் பதிவையும் பராமரிப்பது கட்டாயமாகும் என்றும், கைகளைக் கழுவுவதற்கான வசகளை வழங்குதல், வெப்ப நிலையைச் சரிபார்த்தல், தொழிலாளர்களுக்கான வளாகத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல் போன்றவற்றை உறுதி செய்தல் வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

மேலும் தனிமைப் படுத்தல் சட்ட விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என்றும், சட்ட திட்டங்களை மீறும் அலுவலகங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராகத் தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

### முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பைக் கண்டித்து

## இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற வைகோ உட்பட 300 பேர் கைது

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த முயன்ற ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட 300 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

லயோலா கல்லூரி அருகே வைகோ தலைமையில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. செய்தி தொடர்பாளர் டி.கே. எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பின்னர் அங்கிருந்து அவர்கள் பேரணியாக, இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த சென்றபோது நடுவழியில் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைதுசெய்தனர்.



# முடிந்தால் என்னைக் கைதுசெய்; அஸாத் சாலி விமலுக்கு சவால்!

அரசாங்கத்தில் இருப்பவர்கள் எனக்கு எதிராகக் கதைக்கலாம். ஆனால் எந்த குற்றச்சாட்டையும் தெரிவிக்க முடியாது. அதனால் விமல் வீரவன்ஸ முடியுமானால் என்னை கைதுசெய்து காட்டட்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி அண்மையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்தொன்றை முன்வைத்து, அவரைக் கைதுசெய்யவேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில் –

கொவிட்டில் மரணிப்பவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் அரசியல் செய்கிறோம் என விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார்.

அதேபோன்று கொவிட்டில் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அரசாங்கம் எரிப்பதற்கு என்றைக்காவது அதற்கான நஷ்டஈட்டை செலுத்தவேண்டிவரும் என நான் தெரிவித்திருந்த கருத்தை வைத்துக்கொண்டு என்னை கைதுசெய்ய வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவிக்கின்றார் என்பதற்காக பொலிஸ்மா அதிபர் என்னைக் கைதுசெய்யப்போவதில்லை. எனக்கு எதிராகத் தெளிவான குற்றச்சாட்டு இருக்கவேண்டும்.

முடியுமானால் என்னை கைதுசெய்யுமாறு விமல் வீரவனஸவுக்கு நான் சவால் விடுகின்றேன். அத்துடன் இந்திய ஊடகமொன்றுக்கும் கடந்த காலங்களில் தெரிவித்திருந்த கருத்தொன்றுக்காக நான் கைதுசெய்யப்பட்டு, பின்னர் சத்தியக்கடதாசி சமர்ப்பித்து வெளியில் வந்தேன் என அவர் தெரிவித்திருந்தார்.

சத்தியக்கடதாசி சமர்ப்பித்து வெளியில்வர நான் விமல்வீரவன்ஸ போன்ற வங்குரோரேத்து அரசியல் செய்பவன் அல்லன். 10 இற்கும் மேற்பட்ட சத்தியக்கடதாசி எனக்கு வழங்கப்பட்டது.

அவை அனைத்தையும் கிழித்தெறிந்தேன். என்னை கைதுசெய்த அதிகாரி இன்றும் இருக்கின்றார். என்னை



எவ்வாறு கைதுசெய்தார்கள், எவ்வாறு விடுவிக்கப்பட்டேன் என்பவை தொடர்பில் அவரிடம் கேட்டுப்பார்க்கட்டும்.

மேலும் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராக இருந்த காலத்தில், என்னால் ஏதாவது மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றனவா எனத் தேடிப்பார்க்க மஹிந்த ராஜபக்ஷ, குற்றப்புலனாய் அதிகாரிகளை நியமித்திருந்தார்.

18 மாதங்களாகத் தேடியும் எந்த மோசடியையும் கண்டுபிடிக்க முடியாமல்போனது. அதனால் எமக்கு எதிராக அரசாங்கத்தில் உள்ளவர்கள் பேசலாம். ஆனால் எந்த மோசடி குற்றச்சாட்டையும் தெரிவிக்க முடியாது.

அத்துடன் கொவிட்டில் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை வைத்துக்கொண்டு நாங்கள் அரசியல் செய்பவர்கள் அல்லர். அரசாங்கமே அரசியல் செய்துகொண்டிருக்கின்றது.

மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் எந்த பிரச்சினையும் இல்லை என சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணர்கள் பலரும் உறுதியாகத் தெரிவித்தும் அரசாங்கம் அதனை அனுமதிக்காமல், வேண்டுமென்றே முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரித்து வருகின்றது.

கொவிட் தொடர்பான அனைத்து விடயங்களையும் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துவரும் அரசாங்கம், மரணிப்பவர்களை அடக்கம் செய்வதில் மாத்திரம் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலை ஏற்றுக்கொள்வதில்லை. இது முஸ்லிம்களை பழிவாங்குவதற்காக வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுவதாகும் என்றார்.

# நினைவுத்தூபியை இடிப்பு பதவி மோகத்துக்காகவே!

## யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டு

பதவிமோகத்துக்காகவேயாழ்.பல்கலைத் துணை வேந்தர் நினைவுத்தூபியை இடித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஊடக சந்திப்பில் யோகேஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

2009 முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனித்ததன் பிற்பாடு தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்பட்ட நிலையில், எங்கள் தமிழ் உயர் அதிகாரிகளும் பதவிமோகம் மற்றும் பதவியை தக்கவைக்கவேண்டும் என்பதற்காக தமிழர்கள் இதுவரைப்பட்ட துன்பியல்புகள் உணர்வுகள் எல்லாம் மறந்து அரசாங்கத்துக்கு வால் பிடிப்பவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறு அபிவிருத்தி வந்தால் போதும் அதற்கு அரசாங்கத்தின் கட்சியின் அரசியல்வாதிகள் தங்களுக்குள்ளே சண்டைபோட ஆரம்பித்துள்ளனர். அதற்கு எதிர்க்கட்சி ஒருவரும் குரல்கொடுத்து வருகின்றார்.

அதேபோன்று யாழ்பாணத்திலும் இவ்வாறே அரசாங்க கட்சியில் இருப்பவர்கள் தாங்கள் தான் அபிவிருத்தியை கொண்டு வந்தோம் என விளம்பரங்கள் செய்கின்றனர்.

ஆனால் இந்த யாழ்.பல்கலைக்கழகத்தின் நினைவு தூபி உடைப்பு விவகாரம் சார்பாக யாழ்.மாவட்டத்தில் இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ்



மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், தாங்கள் அதனை உடைக்க உத்தரவிட்டோம் என கூறவில்லை ஏன்?

அபிவிருத்திக்கு குரல்கொடுக்கின்ற நீங்கள், ஏன் இதற்கு பொறுப்பேற்க தவறுகின்றீர்கள். அதனை பகிரங்கமாகத் தெரிவியுங்கள் உங்கள் ஆதரவாலேதான் இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது. அல்லாவிடின் நீங்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு அந்த உபவேந்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் செய்யமாட்டார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் பின்னியிருப்பவர்கள். தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பியல் தொடர்பாக ஒரு நினைவுச் சின்னமும் உருவாகக்கூடாது என இந்த அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அவ்வாறான நினைவுச் சின்னம் இருப்பதாயின் அதை அழிப்பதற்கு முற்படுகின்றது.

ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்பட்டதன் பின்னர் ஜே.வி.பி.யினர் அந்த கிளர்ச்சியின் நினைவாக தங்களது போராளிகள் இறந்தமையை நினைவு கூர்ந்து சில பல்கலைக் கழகங்களில் நினைவு தூபியை அமைத்திருக்கின்றனர். அது உடைக்கப்படவில்லை. ஆனால் எங்களது உறவுகள் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்ததற்காக யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நினைவுத் தூபியை அமைத்தால் அது உடைக்கப்பட வேண்டும்.

உண்மையிலே எமது தமிழ் மக்கள் பெரிய இனப்படு கொலைக்கு ஆளாகியிருக்கின்றனர். அதை எங்களுடைய அரசியல்வாதிகள் சிலரே எடுத்துச் செல்லுவதற்குத் தவறுகின்றனர். இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றது என்பதை நினைவுபடுத்துவதில் அவ்வாறான நினைவு தூபிகளும் எதிர்காலத்தில் உதவக்கூடியவை, பல்கலைக்கழக மாணவர்கள் அதைத்தான் நினைவு கூர்ந்தார்கள் அதைக்கூட உடைத்து விட்டார்கள்.

உபவேந்தர் ஒரு தமிழர் அவரே தான் அதைச் செய்தார் எனச் சொல்லுகின்றார். ஆனால் நாங்கள் அவ்வாறு உத்தரவிடவில்லை என இராணுவத் தளபதி தெரிவிக்கின்றார்.

தமிழரின் கையைப் பிடித்து தமிழரின் கண்ணிலே குத்தியிருக்கின்றார்கள். எனவே வடக்கு கிழக்கு தமிழ் மக்களின், தமிழ் உணர்வை தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதன் நினைவை யாழ்.உபவேந்தர் தன் பதவி மோகத்திற்காக உடைத்திருக்கின்றார் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். –என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை அனுமதி!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் மீளவும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை உத்தியோகபூர்வமாக அமைக்க, நல்லூர் பிரதேச சபை நேற்று (திங்கட்கிழமை) அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்தழிக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமையுடன், நேற்று காலை வரை உணவு தவிர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது அந்தப் பகுதிக்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா, உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்த மாணவர்களுடன் கலந்துரையாடி, போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைப்பதற்கான அடிக்கல்லையும் மாணவர்களுடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நாட்டினார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வளாகத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்ட யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், அங்கு வந்திருந்த ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது -

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை மீள அமைப்பது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தூபியை நிர்மாணிப்பதற்கான முழுமையான நிதியையும் திருகோணமலையை சேர்ந்த ஒருவர் வழங்குவதாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறினார். - எனவும் அவர் மாணவர்களிடம் தெரிவித்தார்.

# கயந்த கருணாதிலகவுக்கு கொரோனா தொற்றில்லை!

கொழும்பு, ஜன.12

ரவூப் ஹக்கீமுடன் நெருங்கிய தொடர்பு என அடையாளம் காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலகவுக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கயந்த கருணாதிலகவுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சுயமாக முன்வந்து குடும்பத்தினருடன் பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாக நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனையின் முடிவின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலகவுக்கும் அவரது குடும்பத்தாருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

2021 ஜனவரி 5 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமுடன் நெருங்கிய தொடர்புடையவராக அடையாளம் காணப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கல்வியல் கல்லூரியில் பயிற்சி முடித்த 384 ஆசிரியர்கள் வடமாகாணத்துக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.12

கல்வியல் கல்லூரிப் பயிற்சியை நிறைவு செய்த 384 ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்படவுள்ளனர் என வடக்கு மாகாணக் கல்விஅமைச்சின்செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கல்வியல் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் இந்த ஆண்டு எமது மாகாணத்திற்கு 384 ஆசிரியர்கள் கிடைக்கின்றனர். இவ்வாறு வடக்கே வரவிருக்கும் ஆசிரியர்களிற்கான நியமனக் கடிதம் 15ஆம் திகதி கிடைக்கும். அந்த நியமனத்தை பெறுபவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் கடமையை பொறுப்பேற்க முடியும்.

இவ்வாறு நியமனம் பெறும் 384 ஆசிரியர்களில் 52 பேர் ஆங்கில பாட ஆசிரியர்களாகக் கிடைக்கப் பெற்றுள்ளனர். இதேநேரம் இம்முறை நியமனம் பெறும் ஆசிரியர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வெளியிலேயே நியமிக்கப்படுவார்கள்.

எனினும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வடமராட்சி மற்றும் தீவகம் வலயங்களில் நிலவும் வெற்றிடங்களில் இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் மேலாக வெற்றிடங்கள் காணப்படும் வடமராட்சி கிழக்கிற்கும் கடல் கடந்த தீவுகளிற்கும் மட்டுமே ஒரு பகுதியினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நியமனம் செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# மைத்திரிக்கு சந்திரிகா காட்டமான கடிதம்



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலை வரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் காட்டமான கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பது சட்டவிரோதமானது என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இந்தியாவின் ஊடக மொன்றுக்கு மைத்திரி வழங்கிய செவ்வியில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு தனது கடிதத்தில் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தாம் தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தான் எனவும், தாம் கட்சியின் மத்திய செயற்குழு அங்கத்தவர் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், நீண்டநாள்களாகக் கட்சியின் பொதுச்செயலாளராக கடமையாற்றிய மைத்திரிபாலவுக்கு, கட்சியின் யாப்புப் பற்றிய தெளிவின்மை என்பது நகைப்புக்குரியது எனவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருக்கும் தொற்று

யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் யாழ். பல் கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்புக்கு பரீட்சை விடைத்தாள் திருத்துவதற்காகச் சென்று திரும்பிய நிலையில் நேற்று முன்தினம் தொண்டை நோ காரணமாக தானாகவே முன்வந்து தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அவர் உட்பட்டார் எனவும் நேற்று அவருக்குக்கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர் வர்த்தகத் துறை விரையாளர் என்று தெரியவந்துள்ளது.

# 70 வீதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நம்பிக்கை

இந்த ஆண்டு நடுப்பகுதியில் இலங்கையில் 70 வீதமானவர்களுக்கு கொவிட் -19 வைரஸ் தடுப்பூசி கிடைக்கும் எனவும் இவ்வாறு கிடைக்கும் தடுப்பூசிகளில் உலக சுகாதார ஸ்தாபனம் 20 வீதமானவர்களுக்கு இலவசமாக தடுப்பூசிகளை வழங்குவதுடன், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 50 வீதமானவர்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அழுத்கே தெரிவித்தார்.

கொவிட் - 19 செயலணி குழுக் கூட்டத்தில் இறுதியாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

கொவிட் - 19 வைரஸ் பரவல் நிலைமைகள் இன்னமும் அச்சுறுத்தல் மட்டத்திலேயே உள்ளன, ஒரு வைரஸ் பரவல் மிக மோசமாக நாடு பூராகவும் பரவிய பின்னர் உடனடியாக அதில் இருந்து விடுபட முடியாது, உலகில் அனைத்து நாடுகளும் இன்று இவ்வாறான நெருக்கடி நிலைமைகளையே எதிர்கொண்டு வருகின்றன.

தற்போது உலக நாடுகள் கொவிட் வைரஸ் தடுப்பூசியை கண்டறியும் முயற்சியில் ஒரு சில தடுப்பூசிகளைப் பரிந்துரைத்துள்ளன.

அவற்றின் தரம் தொடர்பாக இன்னமும் நிச்சயமான தீர்மானம் ஒன்று எடுக்கப்படவில்லை என்றாலும் கூட இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தடுப்பூசிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவை கூட தற்காலிக நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளாக இருக்குமே தவிர நிரந்தரமான தடுப்பூசிகளாக பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே தற்போதைய நிலைமைகளை இலங்கை கையாண்டு வரும் செயற்பாடுகளில் பெரும்பாலும் ஆரோக்கியமான மட்டத்தைக் கண்டுள்ளதாக நாம் கருதுகின்றோம்.

ஆனால் ஒரு சில விடயங்களில், குறிப்பாக தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் சுகாதாரத் துறையினருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது தொடர்ச்சியான கோரிக்கையாக உள்ளது.

அதேபோல் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளில் கூட சுகாதார தரப்பினர் துரிதமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

இதில் முதல் கட்டமாக 34 லட்சத்து 41 ஆயிரம் தடுப்பூசி டோஸ் வழங்க முடியும் என கணிக்கப்பட்டுள்ளது, அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இது இலவசமாக உலக சுகாதார ஸ்தாபனம் எமக்கு வழங்கும் தடுப்பூசிகளாகும்.

அது தவிர்ந்து மேலும் 50 வீதமானவர்களுக்கும் கொவிட் - 19 வைரஸ் தடுப்பூசிகளை வழங்க முடியும். அவை ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் நிதி உதவியில் நாட்டில் 50 வீதமானவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க முடியும், ஆகவே ஒட்டு மொத்தமாக 70 வீதமானவர்களுக்கு இந்த ஆண்டு நடுப்பகுதியில் கொவிட் வைரஸ் தடுப்பூசிகளை வழங்க முடியும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

# விளக்கமறியலிலுள்ள ஈ.ரி.ஐ நிறுவன பணிப்பாளர்கள் தனிமைப்படுத்தலில்!

நிதி முறைகேடு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.ரி.ஐ. நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் நால்வரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஈ.ரி.ஐ. நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க மற்றும் அஞ்சலி தீபா எதிரிசிங்க ஆகியோர் 6.4 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தனர் எனக் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும், கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், சந்தேக நபர்களுக்கு பிணைவழங்கினால், அவர்களுடனான சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படவாய்ப்புள்ளதாக மன்றில் சுட்டிக்காட்டப்பட்டமையை அடுத்தே நீதிவான் அவர்களை, நாளை செவ்வாய்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். அதற்கமையவே சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக முன்னாள் பணிப்பாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய முன்னாள் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க ஆகியோர் கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திலும், அஞ்சலி தீபா எதிரிசிங்க களுத்துறை சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1982.06.16
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
செவ் - 7 இல்
பாவம் - 25 1/2
கல்வி - A/L
தொழில் - T.V கடை
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1991.03.27
மதம் - இந்து V
நட்சத்திரம் - மகம்
செவ் - 1 இல்
பாவம் - 29 3/4
கல்வி - BA, MA பட்டதாரி
தொழில் - அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

EXPRESS Courier Services
அன்னா
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பள்ளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2021 இல் வெளியிடப்பெற்றது.